தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண் 170/மா/2026
நாள் 30.09.2026

T.R. ஸ்ரீநிவாசன்,
சென்னை–600 091. --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம் 14,
பெரு நகர சென்னை மாநகராட்சி. --- எதிர்மனுதாரர்

சென்னை–600 091, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவரின் 09.06.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.06.2026 அன்று பெறப்பட்டு 170/மா/2026 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–600 091, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 23வது தெரு, மனை எண் 86, கதவு எண் 3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. T.R. ஸ்ரீநிவாசன் என்பவர் 09.06.2026 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"(1.) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186 புழுதிவாக்கம், பாலாஜி நகர் 21வது தெருவில் உள்ள மழைநீர் வடிகாலில், மழைக்காலங்களில் வீராங்கல் ஓடையில் செல்லும் மழைநீர் பின்னோக்கி குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் வருவதை தடுக்கும் வகையில் இரும்பு ஷட்டர் "SWICE GATE" அமைத்துத் தர கோரியும்;

பாலாஜி நகர் 21வது தெருவில் பாதியில் விடுபட்டுள்ள மழைநீர் வடிகால்வாயை முழுவதுமாக கட்டமைத்து 24வது தெருவில் செல்லும் மழைநீர் வடிகாலுடன் இணைத்திடவும் மற்றும் பாலாஜி நகர் 22வது தெருவில் மழைக்காலங்களில் மழை வெள்ளம் தேங்குவதை தடுக்கும் வகையில் மழைநீர் வடிகால்களை கட்டமைத்து அதனை பாலாஜி நகர் 21வது தெருவில் செல்லும் மழைநீர் வடிகாலுடன் இணைத்திடக் கோரியும் 16.12.2025–ல் மாநகராட்சி அதிகாரிகளிடம் மனு வழங்கப்பட்டது.

மனுவின் மீது மாநகராட்சி அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. "SWICE GATE" ஷட்டர் மற்றும் மழைநீர் வடிகாலும் கட்டமைக்கவில்லை.

(2.) பெருமதிப்பிற்குரிய தமிழ்நாடு உள்ளாட்சி முறை மன்றம் நடுவம் அவர்கள் எனது இந்த மனுவினை கருணையுடன் பரிசீலனை செய்து விசாரணைக்கு ஏற்று, விசாரணை தேதி வழங்கி விசாரணை செய்து, பாலாஜி நகர் 21வது தெருவின் மழைநீர் வடிகாலில் "SWICE GATE" அமைத்திடவும், பாலாஜி நகர், 21, 22வது தெருவில் மழைநீர் வடிகாலினை 2026 பருவ மழைக்கு முன்னர் கட்டமைத்து பணிகளை செய்து முடிக்க எதிர்தரப்பினரான மாநகராட்சி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு பாலாஜி நகர் குடியிருப்பு பகுதியில் வெள்ளம் வராமல் தடுத்து, குடியிருப்பு வாசிகள்

பாதிக்காத வகையில் 2026 பருவமழைக்கு முன்னர் பணிகளை முடித்திடவும், உரிய ஆணை பிறப்பித்து உத்தரவு வழங்கிடுமாறும் பணிவுடன் வேண்டுகிறேன்."

2. மனுதாரர் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 06.08.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 21.07.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3. இந்நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்–14ன் உதவி ஆணையர் (முதுநிலை) மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரின் 03.08.2026 நாளிட்ட அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம், வார்டு–186ல் மழைக் காலங்களில் பாலாஜி நகர் 21வது தெருவில் சுமார் 40 மீ நீளமுள்ள மழைநீர் வடிகால்வாயில் வீராங்கல் ஓடையில் செல்லும் மழைநீர் பின்னோக்கி வருவதினை தடுக்கும் வகையில் இரும்பு ஷட்டர் அமைப்பதற்கான பணிக்கும் மற்றும் பாலாஜி நகர் 21வது தெரு மீதமுள்ள நீளத்திற்கும் மற்றும் 22வது தெருவிற்கு புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கான பணிக்கும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பணிகள் மேற்கொள்ள உரிய நடவடிக்கைக்காக பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் மேற்கண்ட விளக்கத்தினை ஏற்று இம்மனுவினை இரத்து செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது."

4. மனுதாரர் 06.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"(1) பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 21வது தெருவில் உள்ள மழைநீர் வடிகாலில், மழைக்காலங்களில் வீராங்கல் ஓடையில் செல்லும் மழைநீர் பின்னோக்கி குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் வருவதை தடுக்கும் வகையில் இரும்பு ஷட்டர் "SWICE GATE" அமைத்துத் தர வேண்டும். மேலும் பாலாஜி நகர் 21வது தெருவில் பாதியில் விடுபட்டுள்ள மழைநீர் வடிகால்வாயை முழுவதுமாக கட்டமைத்து 24வது தெருவில் செல்லும் மழைநீர் வடிகாலுடன் இணைத்திடவும் மற்றும் பாலாஜி நகர் 22வது தெருவில் மழைக்காலங்களில் மழை வெள்ளம் தேங்குவதை தடுக்கும் வகையில் மழைநீர் வடிகால்வாய்களை கட்டமைத்து அதனை பாலாஜி நகர் 21வது தெருவில் செல்லும் மழைநீர் வடிகால்வாயுடன் இணைத்திடக் கோரியும் மாநகராட்சி அதிகாரிகளிடம் 2025–ம் ஆண்டு மனு அளிக்கப்பட்டது.

(2) மண்டல அளவில் மண்டல அலுவலரால் மண்டலத்தில் இருக்கும் தொகையினை மாற்றி அங்கு ஏற்கனவே பணிகளை செய்து வரும் ஒப்பந்ததாரரிடம் தெரிவித்தால் மேற்கண்ட பணியினை செய்து முடித்திருக்கலாம். இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் நிர்வாக அனுமதிக்காக காத்திருக்க தேவையில்லை. ஆனால் மண்டல அளவில் இதற்கான எவ்வித கோப்பும் தயாரிக்கப்படவில்லை.

(3) எனவே, எங்கள் தெருவில் உள்ள பாலாஜி நகர் 21 மற்றும் 22ல் உள்ள குடியிருப்புவாசிகள் 2026 பருவமழைக்கு முன்னர் SWICE GATE ஷட்டர் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பணிகளை முடித்திட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அதிகாரிகளுக்கு உத்திரவிடுமாறு உரிய ஆணையினை பிறப்பிக்க இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

5. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவிப் பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோர் 06.08.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்:–

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம், வார்டு 186ல் மழை காலங்களில் பாலாஜி நகர் 21வது தெருவில் சுமார் 40 மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால்வாயில் வீராங்கல் ஓடையில் செல்லும் மழைநீர் பின்னோக்கி வருவதை தடுக்கும் வகையில் இரும்பு ஷட்டர் அமைப்பதற்கான பணிக்கும் மற்றும் பாலாஜி நகர் 21வது தெரு மீதமான நீளத்திற்கும், மற்றும் 22வது தெருவிற்கு புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கான பணிக்கும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மேற்கண்ட பணிக்கு தமிழக பட்ஜெட்டில் Fund Appropriation செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் மனுதாரர் குறிப்பிட்ட பணியானது முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும் என்ற விவரத்தினை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம்.".

6. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவி ஆணையர் (முதுநிலை) மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரின் அறிக்கை, உதவிப் பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14, வார்டு 186, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 21வது தெருவில் உள்ள மழைநீர் வடிகாலில், மழைக்காலங்களில் வீராங்கல் ஓடையில் செல்லும் மழைநீர் பின்னோக்கி குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் வருவதை தடுக்கும் வகையில் இரும்பு ஷட்டர் "SWICE GATE" அமைக்க வேண்டும் என்பதும், 21வது தெருவில் பாதியில் விடுபட்டுள்ள மழைநீர் வடிகால்வாயை முழுவதுமாக கட்டமைத்து, 24வது தெருவில் செல்லும் மழைநீர் வடிகாலுடன் இணைத்திடவும் மற்றும் 22வது தெருவில் மழைக்காலங்களில் மழை வெள்ளம் தேங்குவதை தடுக்கும் வகையில் மழைநீர் வடிகால்வாய்களை கட்டமைத்து அதனை பாலாஜி நகர் 21வது தெருவில் செல்லும் மழைநீர் வடிகால்வாயுடன் இணைத்திடக் கோரியும் மாநகராட்சிக்கு மனு அளிக்கப்பட்டது என்பதும், மண்டல அளவில் மண்டல அலுவலரால் மண்டலத்தில் இருக்கும் தொகையினை மாற்றி அங்கு ஏற்கனவே பணிகளை செய்து வரும் ஒப்பந்ததாரரிடம் தெரிவித்தால் மேற்கண்ட பணியினை செய்து முடித்திருக்கலாம் என்பதும், இதற்காக பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையிடத்தில் நிர்வாக அனுமதிக்காக காத்திருக்க தேவையில்லை என்பதும், மண்டல அளவில் இதற்கான எவ்வித கோப்பும் தயாரிக்கப்படவில்லை என்பதும், எனவே, பாலாஜி நகர் 21 மற்றும் 22ல் தெருக்களில் உள்ள குடியிருப்புவாசிகள் பாதிக்காத வண்ணம் 2026 பருவமழைக்கு முன்னர் SWICE GATE ஷட்டர் மற்றும் மழைநீர் வடிகால்வாய் பணிகளை முடித்திட பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14ன் அதிகாரிகளுக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள புழுதிவாக்கம், வார்டு 186ல் மழை காலங்களில் பாலாஜி நகர் 21வது தெருவில் சுமார் 40 மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால்வாயில் வீராங்கல் ஓடையில் செல்லும் மழைநீர் பின்னோக்கி வருவதை தடுக்கும் வகையில் இரும்பு ஷட்டர் அமைப்பதற்கான பணிக்கும் மற்றும் பாலாஜி நகர் 21வது தெருவில் விடுபட்டுள்ள நீளத்திற்கும், மற்றும் 22வது தெருவிற்கு புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கான பணிக்கும் மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதும், மேற்கண்ட பணிக்கு தமிழக பட்ஜெட்டில் Fund Appropriation செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தினால் நிதி ஒதுக்கீடு செய்யும்பட்சத்தில் மனுதாரர் குறிப்பிட்ட பணியானது முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்பது எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவி ஆணையர் (முதுநிலை) மற்றும் செயற்பொறியாளர் ஆகியோரின் அறிக்கை, உதவிப் பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 14, வார்டு 186, புழுதிவாக்கம், பாலாஜி நகர், 21வது தெருவில் சுமார் 40 மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால்வாயில் வீராங்கல் ஓடையில் செல்லும் மழைநீர் பின்னோக்கி வருவதை தடுக்கும் வகையில் இரும்பு ஷட்டர் அமைப்பதற்கான பணி, 21வது தெருவில் விடுபட்டுள்ள நீளத்திற்கும் மற்றும் 22வது தெருவிற்கு புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைப்பதற்கான பணி ஆகியவற்றிக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும், இப்பணிகளுக்கு தமிழ்நாடு பட்ஜெட்டில் Fund Appropriation செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சி தலைமையகத்தினால் இம்மண்டலத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் மனுதாரர் குறிப்பிட்ட பணியானது முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் உதவிப் பொறியாளர் மற்றும் தொழில் நுட்ப உதவியாளர் ஆகியோர் தங்களது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மேற்கண்ட பணிகளை விரைந்து முடிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 14–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 30–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு T.R. ஸ்ரீநிவாசன்
மனை என் 86, கதவு எண் 3/2
பாலாஜி நகர், 23வது தெரு
புழுதிவாக்கம், சென்னை–600 091.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 14,
பெருநகர சென்னை மாநகராட்சி
எண் 6/64, புழுதிவாக்கம் மெயின் சாலை,
மடிப்பாக்கம், சென்னை 600 091.

(4) கண்காணிப்பாளர்/ ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை 600 003.

நகல் :

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள்
முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்

இ.கோ. / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

30/9/26

செயலாளர்.